# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 103 | சனிக்கிழமை Saturday | 11.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode


# கரூரில் 31 பேருக்கு அரசு பணி

## நியமன ஆணைகளை முதலமைச்சர் விஜய் வழங்கினார்



கரூர்:

சென்னை: கரூரில் கடந்த 2025 செப்., 7ல், தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் பங்கேற்ற கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த குடும்பத்தைசேர்ந்த31பேருக்கு தற்காலிக அரசு பணி வழங்குவதற்கான பணி நியமன ஆணைகளை முதல்வர் விஜய் வழங்கினார். ஈரோட்டை சேர்ந்தவருக்கு 10 லட்ச ரூபாய்க்கான நிவாரண நிதியுதவி வழங்கப்பட்டது.

கரூரில் கடந்த 2025 செப்., 7ல், தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் பங்கேற்ற கூட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் உயிரிழந்தனர். அதன் பின், 285 நாட்களாக கரூர் செல்லாத நிலையில், முதல்வரான பின், முதல் முறையாக விஜய் இன்று கரூர் சென்றார். கரூர் மாவட்டம், வெண்ணெய்மலை அருகே, தனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், 5,000 பேர் பங்கேற்கும் மக்கள் சந்திப்பு கூட்டத்தில், முதல்வர் விஜய் பங்கேற்று உரையாற்றினார்.

தொடர்ந்து, 'ரோடு ஷோ' சென்ற முதல்வர் விஜய், விருந்தினர் மாளிகையில் சிறிது நேரம் ஓய்வெடுத்தார். பிறகு, கலெக்டர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, அதிகாரிகளுடனான ஆய்வுக்கூட்டம் ஆகியவற்றில் பங்கேற்றார்.

மனவாசி ஊராட்சியில், 1,700 கோடி ரூபாயில், தோல் அல்லாத காலணிகளை உற்பத்தி செய்யும் தனியார் எவர்கிரீன் கோதாரி காலணி தயாரிப்பு நிறுவனத் திற்கு, முதல்வர் அடிக்கல் நாட்டினார். இந்த தொழிற்சாலையால், 13,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைதொடர்ந்து, கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு, கருணை அடிப்படையில், பல்வேறு அரசு துறைகளில் தற்காலிக பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

"நம் அனைவருக்கும் இத்தனை வலிகள், காயங்கள் கொடுத்தவர்களுக்கு 2026 தேர்தலில் தக்க பதிலடி கொடுத்துவிட்டீர்கள். ஆனால், அது மட்டும் போதாது மக்களே, எழுந்திருக்கவே முடியாத அளவுக்கு நிரந்தரமான பதிலடி கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்" என்று கரூரில் முதல்வர் விஜய் பேசினார்.

கரூரில் முதல்வர் விஜய் உரையாற்றுகையில், "ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் எத்தனை உயரங்களுக்குச் சென்றாலும், சில காயங்களை, வலியை மறக்க முடியாது. எனக்கு அனைத்தையும்விட வலியும், காயமும் ஏற்படுத்தியது கரூர் சம்பவம்தான்.

பெரம்பலூர் செல்லும் முன் கூட்டம் அதிகமாக இருப்பதால் அங்கு செல்ல வேண்டாம் என போலீஸ் கூறியது. நாமக்கல்லில் இருந்து கரூர் வந்தபோது அங்கிருந்த காவல் துறை எங்களை அலர்ட் செய்யாதது ஏன்?

நெடுஞ்சாலையில் இருந்து எங்களை சம்பவ இடத்துக்கு அழைத்து வந்துவிட்டது போலீஸ்தான், இப்படி நடந்தால் அப்படிச் செய்யுங்கள், அப்படி நடந்தால் இப்படிச் செய்யுங்கள் எனச் சொல்லி பிரஷர் போட்டது யார்? கரூர் சம்பவத்தை வைத்து அரசியல் செய்தனர்.

நம் எல்லோருக்கும் இத்தனை வலிகள், காயங்கள் கொடுத்தவர்களுக்கு 2026 தேர்தலில் தக்க பதிலடி கொடுத்துவிட்டீர்கள்; ஆனால், அது மட்டும் போதாது மக்களே, எழுந்திருக்கவே முடியாத அளவுக்கு நிரந்தரமான பதிலடி கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். என் அக்கா, தங்கைகளை இழந்திருக்கிறேன். வலியோடு இருந்த என்னை ஓடி ஒளிந்துவிட்டேன் எனக் கூறுவதா?

நான் அரசியல் ஆதாயம் தேடும் அரசியல்வாதி அல்ல. வாய் இருப்பதற்காக என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா? பணமா, ஜனமா எனக் கேட்டால்; எனக்கு ஜனம்தான் முக்கியம். விஜய் ஒவ்வொரு கதையாக எடுத்து வெளியே விடுவார் போல எனக் கதறுகிறார்கள்.

விஜய் ஏன் அதைப் பற்றி பேசவில்லை, இதைப் பற்றி பேசவில்லை என்கிறார்கள். பாட்டுக்கு பாட்டு கச்சேரி பண்ண எங்களுக்கும் தெரியும். பண்ணலாமா! என்னை பேசு பேசு என்று சொல்கிறார்கள்; ஆனால் பேச ஆரம்பித்தால் வெளியே சென்றுவிடுகிறார்கள்.

'பார்ட்டி ஃபண்ட்' என்று சொன்னவுடன் சட்டப்பேரவையில் இருந்து ஓடிவிட்டார்கள். யார், எந்த கட்சி என்று கூட சொல்லவில்லை; அவர்கள் ஓடிவிட்டனர். 'என் அப்பா பீரோவுக்குள் இல்லை' என சொல்லுகிறார்கள். இவர்களுடன் ஒரே கூத்தாக இருக்கிறது. 'குற்றம் உள்ள நெஞ்சம் தான் குறுகுறுக்கும்'. 5 நிமிடம் பேசியதற்கே கொளத்தூரில் கொத்துபரோட்டா போட்டு விட்டார்கள். இதுக்கும் மேல் பேசினால் மொத்தமாக முடிந்துவிடும்.

பேசி, பேசி பிரச்சினையை வளர்த்துக் கொண்டு, பிறர் மீது பழியை போட்டுவிட்டு, மக்களை தெருவில் அம்போ என விடும் அரசியல் எனக்குத் தேவையில்லை, செய்யப்போவதும் இல்லை. 'டாக்லெஸ், வொர்க் மோர்' இது தான் நமது பாலிசி.

கரூர் கம்பெனி ஓனர் ஒருவர் எங்கே இருக்கிறார் என தெரியவில்லை. ஓடு ஓடுனு ஓடிக்கிட்டே இருக்கிறார். இன்னொருவர் வெளிநாட்டில் செக்கப்-க்கு சென்றுள்ளார். தவெக ஆட்சிக்கு வந்தபிறகு ஒரு பைசா லஞ்சம் இல்லை, ஊழல் இல்லை. தவெக ஆட்சிக்கு வந்த பிறகு அரசு அலுவலகங்களில் வேலை டக்டக் என நடக்கிறது.

தவெக ஆட்சிக்கு வந்த பிறகு அரசு அலுவலகங்களில் மக்களுக்கு மரியாதை கிடைக்கிறது. ஊழல், லஞ்சம் இல்லை என மக்கள் கூறியதை கேட்கும் போது மகிழ்ச்சியாக உள்ளது.

தீயசக்தி இப்போது யார் கதவை தட்டிக்கொண்டு நிற்கிறது என்பது மக்களுக்கே தெரியும். தீய சக்தியும், தீர்ந்து போன சக்தியும் வேறு வேறெல்லாம் கிடையாது, கூட்டுக் களவாணிகள். அவர்கள் எங்களுக்குள் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என நிரூபிக்க முடியுமா?

நம்ம ஆட்சி அமைந்ததில் இருந்து என்னென்னவோ சொல்கிறார்கள். சோஃபா ஆட்சி, வாஷிங் மெஷின் ஆட்சி என்றெல்லாம் சொல்கிறார்கள். அரசியல் வியாபாரம் செய்வதற்கான வெண்டிங் மெஷினே திமுகதான். உங்களிடம் யாராவது லஞ்சம் கேட்டால் தர முடியாது எனச் சொல்லுங்கள்; நான் இருக்கிறேன் உங்களுடன். அண்ணா பிறந்தநாளன்று தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் தொடங்கப்பட உள்ளது.

நான் கரூருக்கு போகக் கூடாது என கட்டுப்பாடு போட பார்த்தனர். இது திமுக ஆட்சி இல்லை. நமக்கு ஏற்பட்ட வேதனையான சம்பவத்தை, நமக்கு எதிரான சதியை, சூழ்ச்சியை இனி வரும், தலைமுறைக்கு தெரியப்படுத்த கரூரில் தவெக சார்பில் நினைவுச் சின்னம் அமைக்கப்படும். வர இருக்கும் இடைத்தேர்தலில் தீய சக்தி திமுகவை வெளுத்து விடுங்கள்" என்று விஜய் பேசினார்.

# கரூரில் உதவியது யார்? ஓடியது யார்? முதலமைச்சர் விஜய் பேச்சுக்கு தி.மு.க. பதிலடி

தூத்துக்குடி: கரூர் கூட்ட நெரிசல் விவகாரத்தில் உதவியது யார்? ஓடியது யார்? என்பது மக்களுக்கு நன்றாக தெரியும் என திமுக எம்பி கனிமொழி தெரிவித்துள்ளார். கரூர் கூட்ட நெரிசலுக்கு காவல்துறையும், அதற்கு மூளையாக இருந்தது திமுக என்றும் முதல்வர் விஜய் குற்றம்சாட்டிய நிலையில், கரூர் வழக்கு சிபிஐ விசாரணையில் இருப்பதால் பொறுப்புடன் பேசுகிறேன் என்றும் கனிமொழி பதிலடி கொடுத்துள்ளார்.

நிலையில், முதல்வர் விஜய் கரூர் வந்தார். கரூரில் நடைபெற்ற தவெக மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் விஜய் பேசுகையில், என் அக்கா, தங்கைகளை இழந்திருக்கிறேன்.



வலியோடு இருந்த என்னை ஓடி ஒளிந்துவிட்டேன் என்று சொல்வதா? நான் அரசியல் ஆதாயம் தேடும் அரசியல்வாதி அல்ல. வாய் இருப்பதால் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா? பணமா, ஜனமா என்று கேட்டால், எனக்கு ஜனம்தான் முக்கியம். நாமக்கல்லில் இருந்து கரூர் வந்தபோது, அங்கிருந்த போலீஸ் எங்களை அலர்ட் செய்யாதது ஏன்? நெடுஞ்சாலையில் இருந்து எங்களை சம்பவ இடத்திற்கு அழைத்து வந்ததே போலீஸ் தான்.. கரூர் சம்பவத்திற்கு மூளையாக இருந்தது யார்? கரூர் சம்பவத்தை வைத்து அரசியல் செய்தனர் என்று குற்றம்சாட்டியுள்ளார். கரூர் சம்பவத்தில் நேரடியாக காவல்துறை மீதும், திமுக மீதும் விஜய் குற்றம்சாட்டி இருப்பது விவாதமாகி இருக்கிறது. ஏற்கனவே அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, கரூரில் ஒரு கணக்கு தீர்க்க வேண்டியது இருக்கிறது என்று பேசி இருந்தார். விஜய்யின் பேச்சும் ஆதவ் அர்ஜூனாவின் பேச்சை ஒட்டியே அமைந்திருக்கிறது. இந்த நிலையில் முதல்வர் விஜய்யின் பேச்சிற்கு திமுக எம்பி கனிமொழி பதிலடி கொடுத்துள்ளார். தூத்துக்குடியில் செய்தியாளர்களை சந்தித்து கனிமொழி பேசுகையில், கரூர் விவகாரத்தில் முதல்வர் விஜய் பொறுப்பை உணர்ந்து பேச வேண்டும். கரூர் வழக்கு சிபிஐ விசாரணையில் இருக்கிறது விசாரணையில் இருக்கக் கூடிய விஷயம் பற்றி பேசாமல் இருப்பதுதான் நல்லது. அவர்கள் அப்படி பேசுகிறார்கள் என்பதால், நான் பொறுப்பின்றி பேச முடியாது. கரூரில் மக்களுடன் இருந்தது யார்? விட்டு ஓடிச் சென்றது யார் என்று மக்களுக்கு தெரியும் என்று பதிலடி கொடுத்துள்ளார். சிபிஐ விசாரணைக்கு விஜய்யும் 2 நாட்கள் ஆஜராகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் 16ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் நாளை முதல் ஜூலை 16-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை உள்ளிட்ட பகுதிகளில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வட தமிழக கடலோரப் பகுதிகளை ஒட்டி சுமார் 0.9 கிமீ உயரத்தில், ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. தெலங்கானாவிலிருந்து கர்நாடக கடலோரப்பகுதிக்கு அப்பால் உள்ள மத்தியகிழக்கு அரபிக்கடல் வரை சுமார் 1.5 கிமீ முதல் 3.1 கிமீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.



இதன் காரணமாக (ஜூலை 11) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

ஏனைய தமிழகத்தில் ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 12, முதல் 14-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 15-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகத்தில் ஒரிரு இடங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 16-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட தமிழக கடலோரப் பகுதிகளில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் 12 முதல் 14-ம் தேதி வரை ஒரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர்ந்தும், இதர பகுதிகளில் இயல்பை ஒட்டியும் இருக்கக்கூடும்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கோடை கால கோ கிளாம் சிறப்பு விற்பனை கண்காட்சி

## ஜூலை 10 ந்தேதி துவங்கி மூன்று நாட்கள் சுகுணா மண்டப அரங்கில் நடைபெறும் இலவச அனுமதியுடன் சிறப்பு தள்ளுபடி விற்பனையும் உண்டு



கோவை,மற்றும்அதன் சுற்றுப்புற, பகுதிகளில் உள்ள ஷாப்பிங் செய்யும் பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே பெரும் வரவேற்பை பெற்ற கோ கிளாம் ஷாப்பிங் கண்காட்சி பனிரெண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வெவ்வேறு பண்டிகை மற்றும் பல்வேறு சீசன்களில் தமது விற்பனை கண்காட்சியை நடத்தி வருகிறது.

இந்நிலையில் கோடை கால விற்பனை கண்காட்சியாக கோவை அவினாசி சாலை நவ இந்தியா பகுதியில் உள்ள சுகுணா மண்டப அரங்கில் கோ கிளாம் தமது சிறப்பு விற்பனை கண்காட்சியை துவங்கியது.

ஜூலை 10,11,12 ந்;தேதி என மூன்று நாட்கள் நடைபெற உள்ள இதில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள், பரிசு பொருட்கள்,வீட்டு அலங்கார பொருட்கள் என நூறுக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன..

மேலும் தங்கம் மற்றும் வெள்ளி நகை ஆபரணங்கள், அழகான பேஷன் ஆடைகள் குறிப்பாக கோடை காலத்திற்கு ஏற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு விதமான ஆடைகள் மற்றும் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளனமுன்னதாக,

கோ க்ளாம் கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் ஹீனா மற்றும் ராகுல் தலைமையில் நடைபெற்ற கண்காட்சி துவக்க விழாவில்,சிறப்பு விருந்தினர்களாக,அக்ஷிதா மயங்க், ஸ்வேதா மூகாம்பிகா ,கீதா ராம்குமார்,நிவேதா தர்ஷன்,சதுரி ஸ்ரீஜித் ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை துவக்கி வைத்தனர்...

கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்களான ஹீனா மற்றும் ராகுல் ஆகியோர் ஷாப்பிங் கண்காட்சி குறித்து பேசுகையில், சிறப்பு விற்பனை கண்காட்சியாக துவங்கப்பட்டுள்ளதாக இந்த விற்பனை கண்காட்சியில், ஷாப்பிங் செய்ய வருபவர்களுக்கு தேவையான சிறப்பு தள்ளுபடியுடன் அனைத்து பொருட்களுக்கான அரங்குகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்தனர்..

நூறுக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ள இந்த விற்பனை கண்காட்சியில்,

பெண்கள் பயன்படுத்தும் இயற்கை முறையிலான அழகுக்கலை பொருட்கள், சிகை அலங்கார பொருட்கள், முக அலங்கார பொருட்கள், வாசனை திரவியங்கள் போன்றவற்றிற்குதனிதனி அரங்குகள் அமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினர். கோ கிளாம் ஒவ்வொரு சீசனிலும் கோவை,திருப்பூர்,ஈரோடு,நாமக்கல்,உதகை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் வாடிக்கையாளர்கள் வந்து பொருட்களை ஆர்வமுடன் வாங்கிசெல்வதாகதெரிவித்தனர்.



# நவ்லாக் புளியங்கண்ணு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி ந. ப்ரியா ரவிச்சந்திரன், (10.07.2026) வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நவ்லாக் புளியங்கண்ணு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் செயல்படுத்தப்பட்டு வரும் மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகளை திடீரென ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, மாணவர்களுக்கு வழங்கப்பட்ட காலை உணவின் தரம், சுகாதார நடைமுறைகள், உணவு வழங்கும் முறை மற்றும் திட்டத்தின் செயல்பாடு குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, பள்ளி மாணவர்களுடன் நேரடியாக கலந்துரையாடிய மாவட்ட ஆட்சியர், அவர்களின் கற்றல் திறன், வாசிப்புத் திறன் மற்றும் பாட அறிவு குறித்து கேள்விகள் எழுப்பி, மாணவர்களை ஊக்குவித்தார்.

மேலும், கல்வியில் சிறந்து விளங்க தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி நிர்வாக பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

# கோவையில் ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் சைசிட்டியின் தலைவராக டாக்டர் ஆர். பாலமுருகன் பொறுப்பேற்பு விழா

## கோவை பாப்பநாயக்கன் பாளையத்தில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது



கோவை டயாபெட்டீஸ் ஸ்பெஷாலிட்டி சென்டர் மற்றும் மருத்துவமனையின் நிறுவனர் மற்றும் மூத்த நீரிழிவு நோய் நிபுணரான டாக்டர் ஆர். பாலமுருகன், 2026 மற்றும் 2027-ஆம் ஆண்டிற்கான ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் சைசிட்டியின் தலைவராக பதவியேற்று கொண்டார் இதற்கான விழா, கோவை பாப்பநாயக்கன் பாளையத்தில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது. இவருடன்,

கிளப்பின் செயலராக ரொட்டேரியன் ஜே. பாலாஜியும், பொருளாளராக ரொட்டேரியன் ராஜவேலும் பொறுப்பேற்றனர். தமிழக அரசின் மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரப் பணிகள் துறையின் ஒய்வுபெற்ற இயக்குநர், எழுத்தாளர் மற்றும் பேச்சாளரான டாக்டர் ஜெ. ராஜமூர்த்தி தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்திய மருத்துவ சங்கத்தின் தமிழக முன்னாள் தலைவர் மற்றும் ஹாஸ்பிட்டல் போர்டு ஆஃப் இந்தியாவின் தலைவர் டாக்டர் கே.எம். அபுல் ஹசன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். இந்திய மருத்துவ சங்க கோவை கிளையின் தலைவர் டாக்டர் பி. கோஷல்ராம் புதிய நிர்வாகக் குழுவை பாராட்டினார். மேலும், ரோட்டரி இன்டர்நேஷனல் மாவட்டம் 3206-இன் மாவட்ட இயக்குநர் ரொட்டேரியன் மணிவண்ணன், உதவி ஆளுநர் ரொட்டேரியன் தீபனா, ஜி.ஜி.ஆர். ரொட்டேரியன் துளசீது ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னாள் தலைவர் ரொட்டேரியன் ஹால்துரை மற்றும் முன்னாள் செயலர் ரொட்டேரியன் அனந்தகிருஷ்ணன் ஆகியோர் புதிய நிர்வாகத்திடம் பொறுப்புகளை முறையாக ஒப்படைத்தனர். இதுகுறித்து தனது ஆண்டு செயல்திட்டத்தை அறிமுகப்படுத்திய டாக்டர் ஆர்.பாலமுருகன், செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.. நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுப்பதை மையமாகக் கொண்ட பல்வேறு சுகாதாரத்திட்டங்கள்செயல்படுத்தப்படவுள்ளதாகவும், மாவட்டம் முழுவதும் முன் நீரிழிவு, பரிசோதனை முகாம்கள் நடத்தப்படவுள்ளதாகவும், இந்திய மருத்துவ சங்கத்துடன் இணைந்து காலாண்டு தோறும் மருத்துவ நிபுணர்கள் பங்கேற்கும் பொதுமக்கள் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக "ரோட்டரி ஹெல்த் சீரிஸ்" தொடங்கப்பட உள்ளது என்றார்.கிளப்பின் முக்கிய சேவைத் திட்டங்களாக பிறவியிலேயே இதயக் குறைபாடுகளுடன் பிறந்துள்ள, இந்தியா மட்டுமின்றி, இலங்கை, வங்கதேசம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 1,500-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு கடந்த 10 ஆண்டுகளில் 'கிஃப்ட் ஆஃப் லைஃப்' திட்டத்தின் மூலம் இலவச உயிர்காக்கும் இதய அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



மதுரை பணி நிரந்தரம் ஊதிய உயர்வு அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும் என்று பல்வேறுகோரிக்கைகளைவைத்துபோராட்டத்தில்ஈடுபட்டடாஸ்மார்க்ஊழியர்கள்தனதுகுடும்பத்துடன்போராட்டத்தில் ஈடுபட்டனர் போராட்டத்திற்கு அனுமதி அளிக்காத காவல்துறையினர் டாஸ்மார்க் ஊழியர்கள் அவர்களது குடும்பத்தில் கலந்துகொண்டனர்பெண்களையும்கைது செய்துதனியார்திருமணமண்டபத்தில்தங்கவைத்துள்ளனர் 25 ஆண்டுகளாக பணி செய்து வரும் டாஸ்மார்க் ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு நிலையான ஊதியம் வழங்கிட வேண்டும் என்றும் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும் என்றும் காளி மது பாட்டில் திட்டத்தை திரும்ப பெற வேண்டும் என்றும் வலியுறுத்தி கப்பலூர் டாஸ்மாக் உடன் முன்பு சாலையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர் போராட்டத்தில் ஈடுபட்ட டாஸ்மார்க் ஊழியர்களை காவல்துறையினர் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்துள்ளனர்

# இந்தியர்களை விட மேலை நாட்டுமக்கள் 70 வயதுக்கு மேல் நோய் நொடியின்றி வாழ யோகாசனம் மிகப்பெரிய வரப்பிரசாதமாக உள்ளது

## இந்தியர்கள் உடல் உழைப்புயின்றி 30 வயதில் பல்வேறு நோய்களுக்கு உள்ளாகுவதாக, கோவையை சேர்ந்த யோகா மாஸ்டர் சத்ரபதி தெரிவித்துள்ளார்



தமிழகவெற்றிக்கழக தலைமையிலான அரசு, ஊழல் அற்ற ஆட்சி அமைக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டு வருகிறது, ஆயினும்இதனைதடுக்க ஏற்படும் தடைகள் நீங்க வேண்டியும் தனி மனித ஒழுக்கத்தை உலகில் உள்ள அனைவருமே கடைபிடிக்க வேண்டும் எனவும்,

உலகநன்மை,போரற்ற உலகம் அமைய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து, தொடர்ந்து 11 நாட்கள், ஜூன் 29ம் தேதி முதல், ஜூலை 9ம் தேதி வரை, அனாசன உபவாச தியானம் எனும் தலைப்பில் யோகாசனங்கள் செய்து அசத்தியுள்ளார் கோவையை சேர்ந்த யோகா மாஸ்டர் சத்ரபதி. இவர் தனது 8 வயதில் கற்று கொண்ட இந்த யோகா பயிற்சிகளை முழுமையாக கற்று கொண்டு கடந்த 10 ஆண்டுகளாக, யுனிவர்ஸல் யோகா சென்டர் என்ற பெயரில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள் முதல், திரைத்துறை பிரபலங்கள் வரை யோகா, பயிற்சிகளை அளித்து வருகின்றார். இந்த நிலையில் மூன்று கோரிக்கைகளை முன் வைத்து


கோவை பீளமேடு புதூர் மாரியம்மன் கோயில் திடலில்,

காலை முதல் மாலை வரை தொடர் யோகாசனங்களை செய்து வருகின்றார். 11வது இறுதி நாளான இன்று, இந்த சாதனை குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய யோகா மாஸ்டர் சத்ரபதி கூறியதாவது... தமிழக முதல்வர் விஜய்க்கு அவர், சினிமாவில் நடிக்கும் முன்பே கராத்தே, ஜிம்னாஸ்டிக்ஸ்,யோகா,சிலம்பம், ஸ்கேட்டிங், சினிமா சண்டைபயிற்சி போன்ற பயிற்சி வழங்கி உள்ளேன். முதல்வரின் தாய் ஷோபா, தந்தை சந்திரசேகர் ஆகியோரும் தன்னிடம் யோகா பயிற்சிகளை பெற்றுள்ளனர். மேலும் இதனை பல்வேறு பிரபல தொலைக்காட்சிகள், சமூக வலைதளங்களில் தனது பேட்டிகள் ஒளிபரப்பாகி பலருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளேன்.

திரைத்துறையில் குறிப்பாக முன்னனி நட்சத்திரங்களான சூர்யா, சிலம்பரசன், குஷ்பு என பலருக்கும், யோகா பயிற்சிகளை வழங்கி உள்ளேன் இதற்காக இந்திய நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கு சென்று பலதரப்பட்ட மக்களுக்கும்,இந்தபயிற்சிகளை அளித்து உள்ளேன்

அந்த வகையில், இந்த வகை பயிற்சிகளை, மேலை நாடுகளான அமெரிக்கன், பிரிட்டிஷ், கான்சுலேட்ஸ், போன்ற பலருக்கும் யோகா கற்று கொடுத்துள்ளேன். பெரும்பாலும் இந்தியர்களை விட, வெளிநாட்டினர் யோகா பயிற்சிகளை கற்று கொள்ள அதிக அளவில் ஈடுபாடு காட்டுகின்றனர். இதன் காரணமாகவே இவர்கள் 70 வயதிற்கு மேலும் நல்ல திட காத்திரமான நிலையில் உள்ளனர். ஆனால் இந்தியர்கள் பலருக்கும் 30 வயதுக்குள் உடல் உழைப்பு இன்றி சர்க்கரை நோய், இரத்த கொதிப்பு, இதய நோய், உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை எடுத்து கொள்ளும் நிலை ஏடுபடுகின்றது என்றார். யோகாசனம் செய்யதால், உடல் ஆரோக்கியம் மட்டுமின்றி மனதளவிலுல் இளமையாக இருக்கலாம் என்றார், எனவே அனைவரும் யோகா கற்று கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம் என்று தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிவகங்கையில் தேசிய காகிதப் பை தினம் மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் பங்கேற்பு



சிவகங்கையில் இருந்து மேலூர் செல்லும் சாலையில் இடையமேலூரை அடுத்துள்ள கண்டாங்கிபட்டியில் உள்ளது மௌண்ட் லிட்ராஜீசீனியர்செகண்டரி உறைவிடப் பள்ளி. இந்தப் பள்ளி நிர்வாகத்தின் சார்பில் தேசிய காகிதப்பூ தினம் கொண்டாடப்பட்டது. இந்த தினத்தை முன்னிட்டு மாணவர்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து கோர்ட் வாசல் வரை நெகிழி ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியினை நடத்தினர்கள். பேரணியை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் அவர்கள் கொடியசைத்து பேரணியைத்தொடங்கிவைத்தார். அப்போது நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டைத் தவிர்த்து, காகிதப் பைகள் மற்றும் துணிப் பைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தும் நோக்கில் மாணவர்கள் முழக்கங்களை எழுப்பியும், விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும் பேரணியை நடத்தினார்கள்.

நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வை முன்னிறுத்தும் வகையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் பள்ளியின் மழலையர் வகுப்பு மாணவர்களும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மாணவர்கள் தாங்களே தயாரித்த காகிதப் பைகளை சிறப்பு விருந்தினர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கினார்கள். மேலும், நெகிழிப் பைகளின் பயன்பாட்டைத் தவிர்த்து, காகிதப் பைகள் மற்றும் துணிப் பைகளின் பயன்பாட்டை ஊக்குவித்து தொடர்ந்து கடைப்பிடிப்பதாக அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இப்பேரணியின் நிறைவு நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், சிவகங்கை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்.சுகுமாரன், சிவகங்கை துணைக் காவல் கண்காணிப்பாளர் ஜி.கண்ணதாசன்

(மாவட்ட குற்ற ஆவணக் காப்பகம்), மற்றும் சிவகங்கை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ,

எல். ஃபிரான்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# உத்துமலை அரசு பள்ளியில் புதிய தலைமை ஆசிரியருக்கு வரவேற்பு

## உயர்கல்விக்கு செல்லும் மாணவிகளுக்கு பாராட்டு



தென்காசி மாவட்டம் உத்துமலை அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய தலைமை ஆசிரியர் பா. சத்திய மூர்த்திக்கு வரவேற்பு அளிக்கும் நிகழ்ச்சியும், உயர் கல்விக்கு செல்லும் மாணவிகளுக்கான பாராட்டுவிழாவும்நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைமை ஆசிரியர் சத்தியமூர்த்தி தலைமை வகித்தார்.

பெற்றோர் - ஆசிரியர் கழகத்தலைவர் முருகன், அரசு பள்ளி பாதுகாப்பு இயக்கத்தின் அமைப்பாளர் சீனிவாசன்,துணைத் தலைவர்ராசாத்தி,பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவி உச்சி மகாளி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி தலைமை ஆசிரியர் ராணி சம்யுக்தா வரவேற்புரை ஆற்றினார்.

தொடர்ந்து, உயர் கல்விக்கு செல்லும் மாணவிகள் செல்வபுஷ்பா, கோகுலலெட்சுமி, திப்ஷிகா, இனிஷா, ஐய்யப்பன்ஜோதி,மற்றும் அதிக மதிபெண் உதயகுமார் ஆகியேரை பொன்னாடை அணிவித்து பாராட்டி மற்றும் ஊக்குவிப்புவழங்கப்பட்டது.

தொடர்ந்து ஆசிரியர்களுக்கு நூலக புத்தகம் வழங்கப்பட்டது

நிகழ்ச்சியில் ஆசிரியர்கள்,பெற்றோர்,பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு புதிய தலைமை ஆசிரியருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

### தமிழ்நாடு பறையர் பாதுகாப்பு பேரவை மற்றும் ஆதித்தமிழர் புரட்சி கழகம் சார்பில்

# திவான் பகதூர் இரட்டைமலை சீனிவாசனாரின் 167வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



தமிழ்நாடு பறையர் பாதுகாப்பு பேரவை மற்றும் ஆதித்தமிழர் புரட்சி கழகம் சார்பில், திவான் பகதூர் தாத்தா இரட்டைமலை சீனிவாசனார் 167-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நிகழ்ச்சி தூத்துக்குடி போல்டன்புரத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில், தமிழக வெற்றி கழகத்தின் முதலமைச்சர் ச.ஜோசப் விஜயின் அறிவுறுத்தலின்படி, கழக பொதுச்செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஆனந்த் வழிகாட்டுதலின்படியும், சட்டமன்ற உறுப்பினரும் மீன்வளத்துறைஅமைச்சருமான ஸ்ரீநாத் உத்தரவின்படியும் தூத்துக்குடி மத்திய மாவட்டச் செயலாளர் SDR சாமுவேல் ராஜ் ஆலோசனைபடியும் தூத்துக்குடி மாவட்டம் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் போல்டன்புரத்தில் இரட்டைமலைசீனிவாசனாருக்கு 44வது வார்டு கழகச் செயலாளர் விஜய் கண்ணன் சிலை அமைத்து கொடுத்தார். இதையடுத்து நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் 44வது வார்டு கழகச் செயலாளர் விஜய் கண்ணனுக்கு விருது வழங்கி சால்வை அணிவித்து தமிழ்நாடு பறையர் பாதுகாப்பு பேரவை நிறுவன தலைவர் இளவரச பாண்டியன் நன்றி தெரி வித்தார். இந்நிகழ்வில், தெற்கு பகுதி கழகச் செயலாளர் A.இசக்கிமுத்து, 50வது வார்டு வட்டக் கழகச் செயலாளர் P.ரமேஷ், மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் R.ராதாகிருஷ்ணன், மத்திய மேற்கு பகுதி இணைச் செயலாளர் S.சுந்தர், 54வது வார்டு வட்டக் கழகச் செயலாளர் வெங்கடேஷ், ஆகியோருடன் கழக நிர்வாகிகளான சேமா ஆறுமுகம், P.செல்வராஜ், சில்லு கார்த்தி, P.அபிஷேக், R.தெய்வேந்திரன் உள்ளிட்ட தமிழக வெற்றிகழகநிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு மீது பொய் புகார் தெரிவித்த அதிமுக ஒன்றிய கவுன்சிலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கோவில்பட்டியை சேர்ந்த செல்வம் என்பவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார்



முன்னாள் அமைச்சரும் தமிழக வெற்றி கழகத்தைச் சேர்ந்த கடம்பூர் ராஜு சாலை போடும் வேலையில்ரூபாய் 27லட்சம் மோசடி செய்ததாக கடந்த சில நாட்களுக்கு முன்பு கயத்தாறு யூனியன் அதிமுக ஒன்றிய கவுன்சிலர் கிரிதர் என்பவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தார் மேலும் இது தொடர்பாக கடம்பூர்ராஜு மேலும்பட்டியல்இன வகுப்பைச் சேர்ந்த ஒன்றிய கவுன்சிலர்கிரிதரை ஜாதிபெயரை சொல்லிதீட்டியதாகபுகார் அளிக்கப்பட்டது

மேலும்இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் செய்தி பரவியது மேலும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பகுதியில் கடம்பூர் ராஜுவிற்கு கண்டனம்தெரிவிக்கும் வகையில் இன்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

இதைத்தொடர்ந்து முன்னாள் அமைச்சர் கடம்பூர்ராஜு ஆதரவாளர் செல்வம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி தமிழக வெற்றி கழக கவுன்சிலர் மந்திரமூர்த்தி ஆகியோர் இன்று மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலகத்தில் புகார் அளித்தனர்

அதில் முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு அனைத்து சமுதாய மக்கள் இடமும் சாதி மத பேதம் இன்றி பழகி வருகிறார் மேலும் தெற்கு திட்டங்களும் பகுதியில் இம்மானுவேல் சேகரனுக்கு சிலை அமைத்து கொடுத்தவர் என அவர் தெரிவித்தார் மேலும் முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு தமிழக வெற்றி கழகத்தில் இணைந்ததை தொடர்ந்து தமிழக வெற்றிக்கழக ஆட்சிக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற காழ்ப்புணர்ச்சியில் அதிமுக ஒன்றிய கவுன்சிலர் கிரிதர் என்பவர் இவ்வாறு பொய் புகார் அளித்துள்ளார்மேலும்சமூகவலைதளங்கள் மற்றும் சுவரொட்டிப்பாக முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜுக்கு எதிராக கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன இவ்வாறு அவதூறு பரப்பும் நபர்கள் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செல்வம் கேட்டுக்கொண்டார்.

சேவைகளுக்காக தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தார். இதை பிடிக்காதவர்கள் முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு பெயரை கலங்கம் ஏற்படுத்தும் வகையில் ஒரு பொய்யான புகார் அளித்துள்ளனர். அவர் மூன்று முறை அமைச்சராக இருந்தவர் கடம்பூர் ராஜு தனது தொகுதி மக்களுக்கு ஓடோடி வேலை செய்தவர். முக்கியமாக கோவில்பட்டி திட்டங்குளம் பகுதியில் தியாகி இமானுவேல் சேகரனார் திருவுருவ சிலையை வைப்பதற்கும் மற்றும் அம்பேத்கர் சிலையை வைப்பதற்கும் கடுமையான முயற்சி செய்தவர் கடம்பூர் ராஜு அவர் மீது சாதி ரீதியாக வேண்டும் என்று இப்படி பொய் புகார் அளித்தும் சமூக வலைத்தளங்களில் பொய்யான தகவல்களை பரப்பி வருகின்றன இதை வன்மையாக கண்டிக்கிறோம் என்று மந்திரமூர்த்தி தெரிவித்தார்.

# சிறப்பு தகுதித் தேர்வில் பணிமூப்பு மற்றும் கற்பித்தல் செய்முறைக்கு மதிப்பெண் வழங்கி, அனைத்து ஆசிரியர்களையும் தேர்ச்சி பெற வைக்க வேண்டும்

## முதலமைச்சருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு கோரிக்கை



சென்ற ஆண்டு உச்ச நீதிமன்றம், பணியில் இருக்கும் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் கட்டாயம் ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) எழுதித் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளது.அதாவது,ஓய்வு பெற ஐந்து ஆண்டுகளுக்குள் உள்ள ஆசிரியர்களுக்குத் தேர்வில் இருந்து விலக்களித்துள்ளது. அதேநேரம், ஓய்வு பெற ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உள்ளவர்கள் பணியில் தொடர வேண்டுமானால், மூன்று ஆண்டுகளுக்குள் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்;அப்படித் தேர்ச்சி பெற்றால் மட்டுமே பணியைத் தொடர முடியும் என்று தீர்ப்பு வழங்கி ஆசிரியர்களை அதிர்ச்சிஅடையச்செய்தது.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து ஆசிரியர் சங்கங்களையும் அழைத்து அரசிடம் கருத்து கேட்கப்பட்டது. அதிலே ஒட்டுமொத்த ஆசிரியர் சங்கங்களும் 2011ஆம் ஆண்டிற்கு முன்னர் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்விலிருந்து விலக்களிக்கக் கேட்டுக்கொண்டோம். மேலும், உச்ச நீதிமன்ற உத்தரவை எதிர்த்துச் சீராய்வு மனுத் தாக்கல் செய்யவும் கேட்டுக்கொண்டோம். அப்படியும் தீர்ப்பு வேறுவிதமாக வரும் பட்சத்தில், அனைத்து ஆசிரியர்களையும் கைவிடாமல் அனைவரும் பணியில் தொடரும் வகையில் சிறப்புத் தகுதித் தேர்வு நடத்த வேண்டும் என்றும்,மற்ற மாநிலங்கள் இத்தகைய சூழலை எவ்வாறு கையாளுகின்றன என்பதை எல்லாம் எடுத்துரைத்தோம். சமூக நீதி அடிப்படையிலும் இடஒதுக்கீடு அடிப்படையிலும் தேர்ச்சி மதிப்பெண்ணை அறிவிக்கக் கேட்டுக்கொண்டோம்.

அதன் அடிப்படையில், வேலை தேடும் தேர்வர்களுக்காக நடத்தப்பட்ட ஆசிரியர் தகுதித் தேர்வில் சமூக நீதியைக் கடைப்பிடித்து, அதனடிப்படையில் தேர்ச்சி அறிவிக்கப்பட்டது. இத்தேர்வில்தற்போது பணியில் இருக்கும்ஆசிரியர்களும் எழுதினர். இதில், பணிபுரியும் பெரும்பாலான ஆசிரியர்கள் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்ச்சி அடைந்தனர்.,ஏற்கனவே பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்குச் சிறப்புத் தகுதித் தேர்வு நடத்த வேண்டும் எனத் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையில், பணிமூப்பிற்கு (Seniority) மதிப்பெண்ணும், பாடம் நடத்தும் தன்மைக்குச் செய்முறை (Practical) மதிப்பெண்ணும் வழங்க வேண்டும் என வலியுறுத்தினோம். மேலும், அவர்கள் கற்பிக்கும் பாடப் பிரிவிலிருந்தே 80 விழுக்காடு கேள்விகள் கேட்கப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தோம். இது வேலை தேடுபவர்களுக்கான தேர்வு இல்லை என்பதால், இதில் இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கான தேர்வு என்பதால், ஒரே சராசரியான மதிப்பெண்ணை வழங்கி அனைத்து ஆசிரியர்களையும் தேர்ச்சி அடையச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டோம்.

இச்சூழலில், சென்ற 4ஆம்தேதி இடைநிலை ஆசிரியர்களுக்கான முதல் தாளும், 5ஆம் தேதி பட்டதாரி ஆசிரியர்களுக்கான சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வும் நடைபெற்றன. இந்தத் தேர்வு நாங்கள் கோரிக்கை வைத்ததற்கு முற்றிலும் மாறாக இருந்தது. முழுக்க முழுக்க வேலை தேடும் தேர்வர்களுக்கு நடத்தப்பட்ட தேர்வை விட மிகக் கடினமாக இருந்தது. 12ஆம் வகுப்பு மாணவர்களைக் கையாளும் ஆசிரியர்களிடம்கேட்கப்படவேண்டிய கேள்விகள் இதில் கேட்கப்பட்டிருந்தன. இடைநிலை ஆசிரியர்கள் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையிலும்,பட்டதாரி ஆசிரியர்கள் கட்டாயக்கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையிலும் உள்ள மாணவர்களைக் கையாளுபவர்கள் என்பதை வினாத்தாள் வடிவமைப்பாளர்கள் அறியாமல் வடிவமைத்துள்ளனர். இருபது ஆண்டுகளாக ஒரே பாடத்தைப் பயிற்றுவித்து வரும் ஆசிரியர்கள் எப்படி இது போன்ற வினாக்களுக்கு விடையளிக்க முடியும்? இது எப்படி இருக்கிறது என்றால், தொடர்ந்து பயிற்சியில் இருக்கும் இளைஞர்களுக்கு 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஒரு குறிப்பிட்ட வினாடிக்குள் இலக்கை அடைய வேண்டும் என்று நேரத்தை நிர்ணயம் செய்து, அந்த இலக்கை அடைந்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற விதியை ஏற்படுத்திப் போட்டியை நடத்துவது போன்றதாகும். அது இளைஞர்களுக்குச் சாத்தியம். ஆனால், அதே போன்ற விதியை நிர்ணயம் செய்து,50வயதிற்குமேல் உள்ளவர்களையும், தொடர் பயிற்சியில் உள்ள இளைஞர்களுக்கு நிர்ணயித்த அதே வினாடிக்குள் ஓடி முடிக்க வேண்டும்; அப்படி ஓடி முடித்தால்தான் வெற்றி பெற முடியும் என்று சொல்வதைப் போன்றுதான் இப்போது நடந்த சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு இருக்கிறது.இதனைவினாத்தாள் வடிவமைப்பாளர்கள் ஏன் உணரவில்லை?

எனவே, ஏற்கனவே அனைத்து ஆசிரியர் சங்கங்களும் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், சராசரியாக 40 விழுக்காடு மதிப்பெண்ணைத் தேர்ச்சி மதிப்பெண்ணாக நிர்ணயம் செய்ய வேண்டும்.அதில் 20 விழுக்காடு மதிப்பெண்ணைப் பணிமூப்பு மற்றும் ஆசிரியர்களின் கற்பித்தல் செய்முறைக்காகவழங்கி,தேர்வுஎழுதிய ஆசிரியர்கள் அனைவரையும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் எனத் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ச.ஜோசப் விஜய் அவர்களையும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ஆ.ராஜ்மோகன் அவர்களையும், பள்ளிக்கல்விச் செயலாளர் மதிப்புமிகு சந்திரமோகன் அவர்களையும், பள்ளிக்கல்வி இயக்குநர் மதிப்புமிகு முனைவர் ச.கண்ணப்பன் அவர்களையும், தொடக்கக்கல்வி இயக்குநர் மதிப்புமிகு முனைவர் மூ.ஆ.நரேஷ் அவர்களையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சா.அருணன்
நிறுவனத் தலைவர்,
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு.



கடந்த 7.7.26 அன்று ஆலங்குளம் ஐந்தாம் கட்டளை அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்டதீவிபத்துகுறித்துமாண்புமிகுஉணவுமற்றும்உணவுப்பொருள்வழங்கல்துறைஅமைச்சர்திரு.ப.வெங்கடரமணன் அவர்கள் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று 10.6.26 கள ஆய்வு மேற்க்கொண்டார்.




ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், கவுந்தப்பாடி ஊராட்சி, சின்னகவுண்டனூர் கிராமம் முதல் பாப்பங்காட்டூர் கிராமம் வரை இடைப்பட்ட சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (10.07.2026) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



தேசிய மீன்வளர்ப்போர் தினத்தினை முன்னிட்டு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் ஈரோடு மாவட்டம், பவானி, பெருந்தலையூரில் மீன்வளர்ப்பு பண்ணையில் முன்னோடி மீன் வளர்ப்போர் மற்றும் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (10.07.2026) வழங்கினார். உடன் உதவி இயக்குநர் (மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை) வ.அப்துல்காதர் ஜெயிலானி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பவானி, பெருந்தலையூரில் உள்ள மீன்வளர்ப்பு பண்ணையில் வளர்க்கப்பட்டு வரும் மீன்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (10.07.2026) பார்வையிட்டார். உடன் உதவி இயக்குநர் (மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை) வ.அப்துல்காதர் ஜெயிலானி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், கவுந்தப்பாடியில் உள்ள பள்ளி மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதியில் மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (10.07.2026) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்



ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.07.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், அரச்சலூர் பேரூராட்சி, ஓடாநிலையில் 3.8.2026 அன்று நடைபெறவுள்ள சுதந்திர போராட்ட வீரர் மாவீரன்தீரன்சின்னமலைஅவர்களின்நினைவுநாள்ஆடிப்பெருக்குவிழா2026ஐமுன்னிட்டுமேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுக்கான கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (09.07.2026) நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# திருச்சி கிழக்கு உள்ளிட்ட தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கு தடை கோரிய வழக்கில் தீர்ப்பு ஒத்திவைப்பு




சென்னை: தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், திருச்சி கிழக்கு உள்ளிட்ட தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரிய வழக்கின் தீர்ப்பை சென்னை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில், இரு தொகுதிகளில் போட்டியிட்ட முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதியை ராஜினாமா செய்தார். அதேபோல, கரூர் தொகுதி எம்எல்ஏ எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை தொகுதி எம்எல்ஏ சி.விஜயபாஸ்கர், பெருந்துறை எம்எல்ஏ ஜெயக்குமார் ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர்.

இவர்களின் வெற்றியை எதிர்த்த தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளபோது, இந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரி திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையைச் சேர்ந்த வெங்கடாஜலபதி, சென்னை உயர் நீதிமன்றத்தில்பொதுநலவழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்தவழக்கு,தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன்அமர்வில்விசாரணைக்குவந்த போது, மனுதாரர் தரப்பில், "தேர்தல் வழக்குகளில், தங்களை வெற்றி பெற்றவராக அறிவிக்க வேண்டும் என வேட்பாளர்கள் கோரிக்கை முன்வைப்பதுண்டு. இடைத்தேர்தல் நடத்தி எம்எல்ஏவை தேர்ந்தெடுத்த பின், தேர்தல் வழக்கை தாக்கல் செய்த வேட்பாளரை வெற்றி பெற்றவராக நீதிமன்றம் அறிவித்து விட்டால், ஒரு தொகுதிக்கு இரண்டு மக்கள் பிரதிநிதி என்ற நிலை ஏற்படும் என்பதால், தேர்தல் வழக்கு நிலுவையில் இருக்கும் வரை சம்பந்தப்பட்ட தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கக் கூடாது என உச்ச நீதிமன்றம்,1967 முதல் 2018-ம் ஆண்டு வரை பல உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அதனால் தேர்தல் வழக்குகளில் முடிவெடுக்கும் வரை இடைத்தேர்தல் அறிவிக்க கூடாது" என்று வாதம் முன்வைக்கப்பட்டது. தேர்தல் ஆணையம் தரப்பில், "தேர்தல் வழக்குகள் குறித்த ஆவணங்கள் இன்னும் தேர்தல் ஆணையத்துக்கு கிடைக்கப்பெறவில்லை. அதனால்,இந்தவழக்கில் நிலைபாட்டை தெரிவிக்க இயலாது" எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசு சார்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், "தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே, முதல்வர் விஜய் உள்ளிட்டோர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர். அவர்கள் ராஜினாமா செய்யும் போது எந்த தேர்தல் வழக்கும் நிலுவையில் இல்லை என தெரிவித்தார். முதல்வர் விஜய் தரப்பில், இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகுதிகளின் வாக்காளராக இல்லாத மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்ய அடிப்படை உரிமை இல்லை. இடைத்தேர்தல் நடத்துவதா? இல்லையா? என்பது குறித்து தேர்தல் ஆணையம் தான் முடிவெடுக்கமுடியும்என்று" வாதிடப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், தேதி குறிப்பிடாமல் வழக்கின் தீர்ப்பை தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

# கோவை பீளமேடு பகுதியில் உள்ள பிஎஸ்ஜி மெட்ரிக்குலேசன் பள்ளியில் நடைபெற்ற மாதிரி மாணவர்களுக்கான தேர்தல்

## வாக்களிப்பதன் அவசியத்தை உணர்ந்து மாணவ மாணவியர்கள் தங்களது வாக்குகளை செலுத்தினர்



கோவை பீளமேடு பகுதியில், பிஎஸ்ஜி மெட்ரிக்குலேசன் பள்ளி செயல்பட்டு வருகின்றது. கடந்த 2009ம் ஆண்டு துவங்க பட்ட இந்த பள்ளியானது, எல்கேஜி முதல் 8ம் வகுப்பு வரை செயல் பட்டு வருகின்றது, இங்கு சுமார், 400 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் மாணவர்களின் கற்றல் திறன் மட்டுமின்றி,மாணவர்களுக்கு உலக அரசியலும் தெரிந்து கொள்ளும் வகையில் மாணவர்களுக்காக தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில், 4ம் வகுப்பு மாணவ மாணவியர்கள் முதல், 8ம் வகுப்பு மாணவ மாணவியர்கள் வரை வாக்குகள் செலுத்தினர். தொடர்ந்து இந்த தேர்தல் குறித்து பள்ளியின் செயலர் நந்தகோபாலன், மற்றும் பள்ளியின் முதல்வர் காயத்ரி, ஆகியோர் கூறியதாவது..

பிஎஸ்ஜி மெட்ரிக்குலேசன் பள்ளி கடந்த 2009ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இப்பள்ளியில் மாணவர்களுக்கு கற்றல் திறன் மட்டுமன்றி,உலகஅரசியலையும் தெரிந்து கொள்ளும் வகையில், மாணவர்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

இதில், மாணவர் தலைமைப் பொறுப்பாளர்களுக்கான தேர்தலாக

நடைபெற்றது. மாணவர்களிடையே ஜனநாயக விழிப்புணர்வையும், தலைமைத்துவப் பண்புகளையும் வளர்க்கும் நோக்கில் மாணவர் தலைமைப் பொறுப்பாளர்களுக்கான

தேர்தலாக நடைபெற்றது.

இத்தேர்தலில் பள்ளி மாணவர் தலைவர், துணை மாணவர் தலைவர், விளையாட்டுத் துறை ஒருங்கிணைப்பாளர், ஒழுக்கத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளுக்கான தேர்தல் வாக்குப்பதிவு முறையில் நடைபெற்றது.

மாணவர்கள் ஆர்வத்துடனும், பொறுப்புணர்வுடனும் தங்களது வாக்குகளைப் பதிவு செய்து ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர். தேர்தல் நடைமுறைகள் அனைத்தும் வெளிப்படையாகவும் ஒழுங்காகவும் ஆசிரியர்களின் மேற்பார்வையில் நடைபெற்றது.

இந்நிகழ்வு மாணவர்களிடையே தலைமைத்துவம், பொறுப்புணர்வு, ஜனநாயக மதிப்பீடுகள் மற்றும் நல்ல குடிமைப் பண்புகளை வளர்க்கும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது என்று தெரிவித்தார். மேலும் தற்போது பதிவாகியுள்ள வாக்கு பதிவுகள்

வரும் திங்கள்கிழமை எண்ணப்பட்டு தற்பொழுது நடைபெற்ற பொறுப்புகளுக்கான பதவிகளில் மாணவர்கள் பதவியேற்பார்கள் என்று தெரிவித்தார்.

மேலும் அடுத்த ஆண்டு முதல் 9ம் வகுப்பு, மற்றும் 10ம் வகுப்புகளுக்கான சேர்க்கைகளும் நடைபெற உள்ளது என்றும் தெரிவித்தார்.

# Baba Barfani ice lingam melts over 90% just days into Amarnath Yatra: 'Climate change is reason'



*The Amarnath Yatra, which began on July 3, more than a year after the deadly Pahalgam terror attack of April last year, has received an overwhelming response. But it seems to have hit another problem, with many news reports suggesting that the naturally formed ice lingam, also called the Baba Barfani, has melted by over 90 per cent, just days into the pilgrimage.*

*The Amarnath Cave Shrine is located at an altitude of about 3,888 metres (12,756 feet) in the Himalayas of Jammu and Kashmir's Anantnag district. It's nestled beneath the Lidder Valley in the Kashmir Himalayas. Pilgrims can reach the shrine via the traditional 48-km Pahalgam route or the shorter but steeper 14-km Baltal route.*

*While the Jammu and Kashmir administration has hailed the record number of devotees returning to the Amarnath cave shrine, many in the union territory have raised an alarm over the quick melting of the ice lingam. Among them is People's Democratic Party (PDP) leader Iltija Mufti Taking to social media platform X, PDP leader Iltija Mufti blamed climate change on "mindlessly axing trees, illegal mining, waste mismanagement and dangerous depletion of water levels" as the factors behind such early melting of the Amarnath ice Lingam.*

*"Only a week into Amarnath Yatra, and the naturally formed lingam has already melted. Climate change from mindlessly axing trees, illegal mining, waste mismanagement & dangerous depletion of water levels are major factors. Unfortunately, the environment has become a casualty in Kashmir's politics. It has NO power currency," Mufti wrote.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.